## ஆப்கானிஸ்தானில் அனைவரையும் உள்ளடக்கிய அரசு அமைய வேண்டும்: ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு வலியுறுத்தல்



**புதுடெல்லி:** ஆப்கனிஸ்தானில் அனைவரையும் உள்ளடக்கிய அரசு அமைய வேண்டும் என்று இந்தியா தலைமையில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. புதுடெல்லி பிரகடனம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட இந்த தீர்மானத்தை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இந்தியா, சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் கூட்டமைப்பான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் ஆப்கனிஸ்தான், பெலாரஸ், ஈரான், மங்கோலியா ஆகிய நாடுகள் பங்கேற்பாளர்களாகவும், அசர்பைஜான், அர்மீனியா, கம்போடியா, நேபாள், துருக்கி, இலங்கை ஆகிய நாடுகள் கலந்துரையாடல் மேற்கொள்பவர்களாகவும் இணைந்துள்ளன.

இந்தியா தலைமையில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு நேற்று நிறைவடைந்தது. இதில், ஆப்கனிஸ்தான் தொடர்பான பிரகடனம் அறிவிக்கப்பட்டு அனைத்து உறுப்பு நாடுகளின் ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்டது. அதில், "ஆப்கனிஸ்தானின் தற்போதைய நிலை கவலை அளிப்பதாக உள்ளது. ஆப்கனிஸ்தானில் அனைத்து இனக் குழுக்கள், மதக் குழுக்கள், அரசியல் குழுக்களையும் கொண்ட அரசு அமைவது மிகவும் முக்கியம் என ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு கருதுகிறது; அது நிகழ அழைப்பு விடுக்கிறது. ஆப்கன் மக்களுக்கு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு தொடர்ந்து உதவும்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள நாடுகள் அடங்கிய நமது இந்த பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்கும், வலுப்படுத்துவதற்கும் ஆப்கானிஸ்தானில் நிலைமை முன்கூட்டியே

சீரடைவது மிகவும் முக்கியம் என்று உறுப்பு நாடுகள் நம்புகின்றன. சுதந்திரமான, நடுநிலையான, ஒன்றுபட்ட, ஜனநாயகத்தின்படியான, அமைதியான நாடாக ஆப்கனிஸ்தான் இருக்க வேண்டும்; பயங்கரவாதம், போர் மற்றும் போதைப்பொருள் இல்லாத நாடாக ஆப்கனிஸ்தான் கட்டமைக்கப்பட வேண்டும் என்பது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் எதிர்பார்ப்பு" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "ஆப்கனிஸ்தானின் நிலை, அனைத்து நாடுகளின் பாதுகாப்புக்கும் நேரடி பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஆப்கனிஸ்தான் விஷயத்தில் இந்தியாவின் கவலை மற்றும் எதிர்பார்ப்பு, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பல்வேறு நாடுகளின் கவலை மற்றும் எதிர்பார்ப்பைப் போன்றதுதான். ஆப்கனிஸ்தான் மக்களின் நலனை உறுதிப்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

ஆப்கன் குடிமக்களுக்கு உதவிகள் செய்வது, அங்கு அனைவரையும் உள்ளடக்கிய அரசு அமைவது, பயங்கரவாதத்திற்கும் போதைப்பொருள் கடத்தலுக்கும் எதிராக அந்நாடு இருப்பதை உறுதிப்படுத்துவது, பெண்கள், குழந்தைகள், சிறுபான்மையினர் ஆகியோரின் உரிமைகளை பாதுகாப்பது ஆகியவை நம் அனைவரின் இணைந்த விருப்பமாக உள்ளது.

இந்திய மக்களுக்கும் ஆப்கன் மக்களுக்கும் இடையேயான நட்புறவு என்பது பல நூற்றாண்டுகளைக் கொண்டது. ஆப்கனின் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்காக இந்தியா கடந்த 20 ஆண்டுகளாக பல்வேறு உதவிகளை அளித்துள்ளது. 2021ல் தலிபான்களின் ஆட்சி ஏற்பட்ட பிறகும் மனிதாபிமான உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்கி வருகிறது" என்று தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் ஈரான் முழுமையான உறுப்ப நாடாக அங்கீகரிக்கப்பட்டது. தங்களையும் முழுமையான உறுப்பு நாடாக அங்கீகரிக்க வேண்டும் என்ற பெலாரசின் கோரிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது என்று உறுப்பு நாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் இந்திய தலைமையின் முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

## மின்னணு ஏற்றுமதியில் தமிழகம் முதலிடம் - திராவிட மாடல் அரசின் செயல்திறனுக்கு எடுத்துக்காட்டு என முதல்வர் பெருமிதம்

**சென்னை:** கடந்த 2017 முதல் 2023-ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், நாடு முழுவதும் மின்னணு ஏற்றுமதி தொடர்பான கணிப்பில், தமிழகம் 2022-23-ம் நிதியாண்டில் நாட்டிலேயே முதலிடம் பிடித்துள்ளது. குறிப்பாக, உத்தர பிரதேசம், கர்நாடகா மாநிலங்களைப் பின்னுக்குத் தள்ளி, தமிழகம் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

மின்னணு ஏற்றுமதியைப் பொறுத்தவரை, ரூ.44 ஆயிரத்து 44 கோடி மதிப்பில் தமிழகம் ஏற்றுமதி செய்துள்ளது. அடுத்தபடியாக உத்தர பிரதேசம் ரூ.40,216 கோடி, கர்நாடகா ரூ.37,082 கோடி, மகாராஷ்டிரா ரூ.22,004 கோடி, குஜராத் ரூ.19,139 கோடி, டெல்லி ரூ.9,102 கோடிக்கு ஏற்றுமதி செய்துள்ளன. 2020-21-ம் நிதியாண்டில் மூன்றாம் இடத்தில் இருந்த தமிழகம் தற்போது முதலிடத்துக்கு வந்துள்ளது. மேலும், கடந்த 2 ஆண்டுகளில் தமிழகத்தின் ஏற்றுமதி 223 சதவீதம் அதிகரித்துள்ளது.

உலகத் தரமான உட்கட்டமைப்பு, வலுவான விநியோகச் சங்கிலி, உலகளாவிய இணைப்பு, சிறந்த தொழில் கொள்கை ஆகியவற்றால் தமிழகம் முதலிடத்துக்கு உயர்ந்துள்ளதாக தொழில் துறை மற்றும் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் ஆகியவை தெரிவித்துள்ளன.

இந்நிலையில், இந்த சாதனை தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்ட சமூகவலைதளப் பதிவில், ‘‘திராவிட மாடல் அரசின் செயல்திறனுக்கான சிறிய எடுத்துக்காட்டுதான், மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் என்ற இந்த சாதனை.

முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழகத்தை உயர்த்தி, தெற்காசியாவின் முதலீட்டு மையமாக தமிழகத்தை மேம்படுத்த உழைக்கிறோம். தொடர்ந்து இதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து, அவற்றில் சிறந்து விளங்கிடுவோம்’’ என்று தெரிவித்துள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

## 31,008 பள்ளிகளுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்: ரூ.404 கோடி நிதி ஒதுக்கி அரசாணை

**சென்னை:** தமிழகத்தில் 31,008 பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை விரிவாக்கம் செய்து, அதற்கு ரூ.404 கோடி நிதி ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சமூகநலத் துறைச் செயலர் சுன்சோங்கம் ஜடக் சிரு வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது: கடந்த ஜனவரி 13-ம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ''முதல்வரின் காலை உணவுத் திட்டத்தால் ஏற்பட்டுள்ள பயனைக் கருத்தில்கொண்டு, தமிழகத்தில் உள்ள அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்கும் இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப்படும்'' என்று அறிவித்தார்

இதையடுத்து, 2023-24-ம் நிதியாண்டு பட்ஜெட்டில், ''காலை உணவுத் திட்டம் வரும் கல்வியாண்டு முதல் தமிழகத்தில் உள்ள 30,122 அரசுத் தொடக்கப் பள்ளிகளில், 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 18 லட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்படும். இதற்காக ரூ.500 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது'' எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, மாநகராட்சி, நகராட்சி, கிராம ஊராட்சிகள் மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்த ரூ.33.56 கோடி ஒதுக்கி, கடந்த ஆண்டு ஜூலை 27-ம் தேதி உத்தரவிடப்பட்டது.

அடுத்தகட்டமாக, 433 மாநகராட்சி, நகராட்சி அரசு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில், 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 56,160 மாணவ, மாணவிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இந்நிலையில், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய நகர்ப்புற பகுதிகள், ஊரகப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 18.54 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்த, ரூ.539.88 கோடி நிதி ஒதுக்குமாறு சமூகநலத் துறை இயக்குநர், தமிழக அரசுக்கு கருத்துரு அனுப்பினார்.

இதை கவனமாகப் பரிசீலித்த தமிழக அரசு, காலை உணவுத் திட்டத்தை 2023-24-ம் நிதியாண்டுக்கு விரிவுபடுத்துவதற்கான உத்தரவுகளை

வெளியிடுகிறது. இதன்படி, 31,008 அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 15,75,900 மாணவ, மாணவிகளுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

இதற்காக, 2023-24 நிதியாண்டில் ரூ.404.41 கோடி ஒதுக்கப்படுகிறது. ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள படி, ஏதேனும் ஒரு சிற்றுண்டியை பள்ளியின் அனைத்து வேலை நாட்களிலும் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும். அனைத்து குழந்தைகளுக்கும் காலை 8 மணி முதல் 8.50 மணிக்குள் சிற்றுண்டி வழங்க வேண்டும். கலப்படமின்றி உணவு சமைக்கப்பட வேண்டும். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை மீண்டும் பயன்படுத்தக்கூடாது. உணவு வழங்கும் முன், பள்ளி மேலாண்மைக் குழுவினர் அதை உண்டு பார்த்து, பின்னர் குழந்தைகளுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு அரசாணை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முதல்வர் தொடங்கிவைப்பார்:** ஏற்கெனவே 2 கட்டங்களாக செயல்படுத்தப்பட்ட இந்த திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரடியாகத் தொடங்கிவைத்தார். அதேபோல, விரிவாக்கத் திட்டத்தையும் வரும் ஜூலை 2-வது வாரத்தில் முதல்வர் தொடங்கிவைக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன

## 600 ஆண்டுகளுக்கு முன்பே பெண் தெய்வ வழிபாட்டை உணர்த்தும் மகிஷாசுர மர்த்தினி நடுகல்: செய்யூர் அடுத்த அகரம் கிராமத்தில் கண்டெடுப்பு



**மதுராந்தகம்:** செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், அகரம் கிராமத்தில், தர்மபுரி அரசு கலைக் கல்லூரி பேராசிரியரும் தொன்மம் வரலாற்று ஆய்வு அறக்கட்டளையின் தலைவரும், தொல்லியல் ஆய்வாளருமான சி.சந்திரசேகர் மற்றும் இந்து மேல்நிலைப் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் ரமேஷ் ஆகியோர் தொடர்ச்சியான கள ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு நடந்த

ஆய்வு ஒன்றில் 14-ம் நூற்றாண்டைச் சேர்ந்த மகிஷாசுர மர்த்தினி நடுகல்லை கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர் சந்திரசேகர் கூறியதாவது: தமிழகத்தில் அதிக அளவில் கிடைத்துள்ள பலகைகல் சிற்பங்களில் பெரிதும் காணப்படும் உருவம் துர்க்கை அம்மன் ஆகும். இது சங்க காலத்தில் இருந்து, பல்லவர் காலம் தொடங்கி, சோழர் காலம் முதல் விஜயநகரம் மன்னர்கள் காலம் வரை காணப்படுகின்றன. பெண் தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும் கொற்றவை, மகிஷாசுர மர்த்தினி, துர்கை அம்மன், நிரம்பசுதனி என பல்வேறு பெயர்களில் காளி வழிபடப்படுகிறாள்.

இந்நிலையில் அகரம் கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ள பலகை போன்ற பாறையில் காணப்படும் காளியானது, மகிஷாசுர மர்த்தினி வகையைச் சார்ந்ததாகும். கி.பி.13 அல்லது 14-ம் நூற்றாண்டு விஜயநகர் காலத்தை சேர்ந்ததாக கருதுகிறேன். சுமார் 8 அடி உயரமுள்ள இந்த நடுக்கல் எட்டு கரங்களுடன், மகிஷாசுரன் எனப்படும் எருமை தலை சூரனின் தலையின் மீது நின்றவாறு காளி காட்சியளிக்கிறாள்.

தலையில் கொண்டையுடன் நீண்ட சடை முடியோடும், மார்பு கட்சையோடு இக்காளி காணப்படுகிறாள். பொதுவாக, மகிஷாசுர மர்த்தினி சிறிய இடை அமைப்போடு நிமிர்ந்த மார்போடும் மார்பில் பாம்பு அல்லது துணியை கட்சையை கட்டியவாறும் அமைக்கப்பட்டிருப்பது இதனுடைய சிறப்பாகும்.

இதன், இடதுபுறம் உள்ள நான்கு கரங்களில் முதன்மை கரமானது இடுப்பில் கையை வைத்து ஊன்றியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கரத்தில் சங்கும், மூன்றாவது கரத்தில் வில் அம்பும், நான்காவது கரத்தில் கேடயம் உள்ளவாறு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

காளியின் வலதுபுறம் உள்ள கரங்களில், முதன்மை கரத்தில் எச்சரிக்கை செய்யும் விதமாகமணி வைத்துள்ளது போலவும், இரண்டாவது கையில் நாக சர்ப்பத்தை சாட்டையாகவும், மூன்றாவது கையில் மிகப்பெரிய வாள் ஒன்றையும், நான்காவது கரத்தில் மான் கொம்பை ஆயுதமாக தரித்தபடியும் அமைக்கப்பட்டுள்ளது. கழுத்தில் ஒரே ஒரு நகைக் காட்டப்பட்டுள்ளது.

இடுப்பில் முழங்காலுக்கு மேல் ஆண்கள் அணியும் அரைக்கால் சட்டை போன்று அமைப்போடும், இடுப்பில் பாம்பினால் கட்டப்
பட்ட கயிற்றோடும் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பாகும். கால்களில் வீரத்தண்டைகள் காணப்படுகின்றன. எருமையின் இருகொம்புகள் இருபுறமும் வளைந்தும், அதன் காதுகள் அதற்கு கீழ்நோக்கியும் எருமை தலையின் மேல் இரு கால்களும் ஊன்றி நின்றுவாறு சிலை

வடிக்கப்பட்டுள்ளது. இந்த சிற்பம் மகிஷாசுரமர்தினிதான் என்பதை உணர்த்தும் வகையில் இடதுபுறம் காக்கையும், வலதுபுறம் நீண்ட கொம்புகள் உடைய மானும் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாமல் மகி ஷாசுர மர்த்தினி போர் புரியும்போது பூதகணங்களும், பிற பெண் தெய் வங்களும் அவருக்கு உதவுவது போன்று, அவரை வழிபட்டுக் கொண்டே இந்நிகழ்ச்சியில் ஈடுபடுவது போன்று, இதன் இருபுறமும் இரண்டு பெண் உருவங்கள் காணப்படுகின்றன.

பொதுவாக, பெண் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாக இந்த பலகை கல் வழிபாடு காணப்படுகின்றது. செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்லவர் கால தொடங்கி இன்று வரை ஏராளமான நடுகற்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், மான் அலங்காரத்தோடு காணப்படுவது பலகை கல்லில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். மைசூர் என்பது மகிஷாசுரனை வதம் செய்த இடமாக கருதக்கூடியது.

கர்நாடகத்தில் இருக்கக்கூடிய ஹாலு மத்த புராணம் என்ற புராணத்தில், இக்காளி எவ்வாறு மகிஷாசுரனை வதம் செய்தாள் என்பதை பற்றி விவரம் காணப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். இதுகுறித்து, ஆசிரியர் ரமேஷ் கூறும்போது, செய்யூர் சுற்றுவட்டார பகுதியில் தொடர்ச்சியாக கள ஆய்வுகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

ஏனெனில், இப்பகுதியுடைய உள்ளூர் வரலாறும், சமய வரலாறும் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதால், ஏராளமான இடங்களில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு கள ஆய்வினை தொடர்ந்து நடத்தும் முடிவு செய்துள்ளோம் என்றார்.

செய்யூர் பகுதிகளில் வரலாற்று ஆய்வாளர்கள் மூலம் கண்டறியப்படும் இத்தகைய சிற்பங்களை, வருவாய்த் துறை மூலம் பாதுகாத்து பராமரிக்க வேண்டும் என உள்ளூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேபோல் செய்யூர் அருகே இந்தளூர் கிராமத்தில் விஜயநகர் பேரரசு காலத்தில் 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த நவகண்டம் நடுகல் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இத்தகைய நடுகல்கள் தொடர்ந்து இப்பகுதியில் கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## மாளிகைமேடு அகழாய்வில் கிரானைட் தூண் கண்டெடுப்பு



**அரியலூர்:** அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே உள்ள கங்கைகொண்ட சோழபுரம் அருகில் உள்ள மாளிகைமேடு பகுதியில் ஏற்கெனவே 2 கட்டங்களாக அகழாய்வுப் பணிகள் நடைபெற்றுள்ளன. இதில், மாமன்னன் ராஜேந்திர சோழன் கால அரண்மனையின் சுவர்கள், சீன வளையல்கள், இரும்பு ஆணிகள் உட்பட 461 பழங்கால பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இதையடுத்து ஏப்.6-ம் தேதி 3-ம் கட்ட அகழாய்வு பணியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இப்பணிக்கு ரூ.30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, 16 குழிகள் தோண்டப்பட்டு, 21 பணியாளர்களைக் கொண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த மே மாதம் செங்கற்களால் ஆன வாய்க்கால் போன்ற அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, 11-ம் நூற்றாண்டில் தமிழகத்துக்கும், சீனாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்பை உறுதி செய்யும் வகையில் சீன பானை ஓடுகள், காசு வார்ப்பு, சுடு மண்ணால் ஆன அச்சு முத்திரை ஆகியவை அண்மையில் கண்டெடுக்கப்பட்டன.

இந்நிலையில், மாளிகைமேடு அருகேயுள்ள உட்கோட்டையில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் அகழாய்வுப் பணியில், 6.40 மீட்டர் நீளம், 72 சென்டி

மீட்டர் அகலம் கொண்ட கிரானைட் கல்தூண் நேற்று முன்தினம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த கல்தூண் அரண்மனைக்கு பயன்படுத்தப்பட்ட தூணாக இருக்கலாம் எனவும், முழுமையாக தோண்டி எடுக்கப்பட்ட பின்னரே முழுவிவரம் தெரியவரும் என தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

EVA STALIN IAS ACADEMY